| தரம் | முதலாம் தவணைப் பரீட்சை – 2016 | புள்ளி |
| --- | --- | --- |
| 10 | புவியியல் I & II | |

சுட்டெண் : ☐☐☐☐ நேரம் : 2.30 மணி

## பகுதி (1)

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. புவி மேற்பரப்பின் பரப்பளவாக கருதப்படுவது?
   1- 610 million சதுர கிலோ மீட்டர்   2- 510 சதுர கிலோ மீட்டர்-
   3- 510 million சதுர கிலோ மீட்டர்   4- 610 சதுர கிலோ மீட்டர்
2. கோதுமைப் பயிர்ச்செய்கைக்கு சாதகமாய் அமைந்த காரணிகளில் ஒன்றாக.
   1- 300-500mm இடையான மழைவீழ்ச்சி   2- 2000mm மேற்பட்ட மழைவீழ்ச்சி
   3- 1000-1500mm இடையான மழைவீழ்ச்சி   4- 200-500mm வரையான மழைவீழ்ச்சி
3. ஆசிய கண்ட மேடையில் அமைந்துள்ள தீவுகள் பின்வருவனவற்றில் எவை சரியானவை?
   1- போர்னியோ, ஜாவா, சுமத்திரா   2- பப்புவா, நியூக்னியா, தஸ்மேனியா
   3- மடகஸ்கார்   4- மேற்கூறப்பட்ட யாவும்
4. தக்கன மேட்டுநிலம் காணப்படும் கண்டம்
   1- ஆபிரிக்கா கண்டம்   2- வட அமெரிக்கா கண்டம்   3- ஐரோப்பாக்க கண்டம்   4- ஆசியாக் கண்டம்
5. அயன மண்டல வலயம் குறித்துக் காட்டும் அகலக் கோட்டு
   1- 23 ½$^{o}$ - 66 ½$^{o}$ வட அகலக் கோடு   2- 23 ½$^{o}$ - 66 ½$^{o}$ தென் அகலக் கோடு
   3- 23 ½$^{o}$ - 23 ½$^{o}$ வட அகலக் கோடு   4- 0$^{o}$ - 23 ½$^{o}$ வட தென் அகலக் கோடு
6. 2004 ஆம் ஆண்டு சுமாத்திராவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி எத்தகடுகளுக்கு இடையில் ஏற்பட்டது?
   1- வடஅமெரிக்கா - தென் அமெரிக்கா தகடுகளுக்கிடையில்
   2- யுரேசியன் தகடு - இந்தியா அவுஸ்திரேலியன் தகடுகளுக்கிடையில்
   3- ஆபிரிக்கா யுரேசியத்தகடுகளுக்கு இடையில்
   4- பசுபிக் -அமெரிக்கா கவசத்தகடுகளுக்கிடையில்
7. கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 100m உயரம் மேலே செல்லச்செல்ல வெப்பநிலை வீழ்ச்சியடையும் நழுவு வீதம்.
   1- 6.4$^{o}$ c ஆகும்   2- 0.064$^{o}$ c ஆகும்   3- 0.64$^{o}$ c ஆகும்   4-64.0$^{o}$ c ஆகும்
8. படை மண்டலத்தையும் இடை மண்டலத்தையும் பிரிக்கும் எல்லையாக கருதப்படுவது
   1-இடைத் தரிப்பு   2- மாற்றரிப்பு   3- கூற்றன் இடைவெளி   4- படைத்தரிப்பு
9. கால நிலை மூலகங்கள் ஒன்றாக கருதப்படுவது
   1-காடுகள்   2- மலைகள்   3- மழை வீழ்ச்சி   4- பாலைவனங்கள்
10. நெல் விவசயம் நடைபெறுவதற்குத் தகுதியான மண்வகைகளின் ஒன்றாக
    1-வளமான வண்டல் மண்   2- செங்கபில செம்பூரான் மண்
    3-செம்மஞ்சல் பொட்சோல்மண்   4- கல்சியமற்ற செங்கபில மண்

**11- 15 வரையிலான வினாக்களுக்கு இடைவெளி நிரப்புக**

11. தேயிலைப் பயிர்ச்செய்கையை கண்டுபிடித்த நாடாக ……………….. கருதப்படுகிறது.
12. இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய பெருந்தோட்டப் பயிராக ………………… கருதப்படுகிறது.
13. இலங்கையின் பெருந்தோட்டப்பயிரான தென்னை முக்கோண வலயமாக கருதப்படும் மாவட்டம்
    1) …………………. 11) ……………………..111) ……………….ஆகும்.
14. பமீர் மேட்டு நிலம் அமைந்திருக்கும் நாடு …………… ஆகும்
15. உலகிலே மிகவும் ஆழமான ஆழியின் ஆழம் …………… ஆகும்.

**15 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்கு உலகப்படத்தில் குறித்துப் பெயறிடுக.**

(உலகப்படம் வழங்கப்படுதல் வேண்டும் )

16. தீப்பாறைகளினால் உருவான பெரிய தீவு கீரின்லாந்து
17. கரீபியன் தகட்டினை குறித்துப் பெயரிடுக
18. பால்டிக் கடல் காணப்படும் பிரதேசம்
19. வடஅமெரிக்காவின் பொருளாதாரத்தில் முன்னனிக்கு உதவும் அப்பலாச்சியன் மலை
20. ஆபிரிக்கா கண்டத்தில் பிரதானமான நெல் உற்பத்தி நடைபெறும் நைல் நதிப் பல்லத்தாக்கு .

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி (11)

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**

1. புவியின் சேர்க்கை தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   1- புவியின் பிரதான தொகுதிகளைக் குறிப்பிடு. (4 புள்ளிகள்)
   2- நீர் குறிப்பிட்ட தொகுதிகளின் ஒன்றைத் தெரிவு செய்து அதன் கட்டமைப்பு படத்தினை வரைந்து பெயரிடுக (4 புள்ளிகள்)
   3- வளி மண்டலத்தின் மாறன் மண்டத்தின் சிறப்பம்சங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

2. புவியின் அமைப்பு தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
   1- உலகப்படத்தில் பிரதான புவியோட்டுத்தகடுகளைக் குறித்துப் பெயரிடுக. (4 புள்ளிகள் )
   2- புவி அமைப்பில் குறுக்கு வெட்டுமுகத்தை வரைந்து அதன் மூன்று படைகளையும் அதன் எல்லைகளையும் குறிப்பிடுக. (5 புள்ளிகள் )
   3- புவியோட்டில் காணப்படும் மனிதனுக்குப் பயன்படக்கூடியதுமான 3 வகையான கனிப்பொருட்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள் )

3. புவியின் பிரதான பண்புகளை அடிப்படையாக் கொண்டு விடையளிக்குக.
   1- கண்ட மேடை என்றால் என்ன? (3 புள்ளிகள் )
   2- உலகின் பிரதான கணடங்களின் பெயர்களை உலகப்படத்தில் குறித்துப்பெயரிடுக . (7 புள்ளிகள் )
   3- சமுத்திரங்களையும் கடல்களையும் வளங்களாக மனிதன் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 தருக. (2 புள்ளிகள் )

4. கால நிலை வகைப்பாட்டு அடிப்டையாகக் கொண்டு விடையளிக்குக.
   1- கால நிலை என்றால் என்ன என்பதை வரையறை செய்க? (3 புள்ளிகள்)
   2- உலகக் காலநிலை பாகுபாட்டை முன்வைத்தவர்களுள் மூன்று பேரின் பெயர்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   3- அகலக் கோடுகளை அடிப்படையாகக் கொண்டு வரைபடமொன்றில் உலகின் மூன்று பிரதான காலநிலை வலயங்களையும் குறிப்பிட்டு அவ்வலயங்கள் ஒவ்வொன்றினதும் இவ்விரண்டு பிரதான பண்புகளைத் தருக. (6 புள்ளிகள் )

5. உலகின் விவசாயம்
   1- உலகப்படமொன்றில் ஆசியாவிலும் ஆசியாவுக்கு வெளியிலும் நெற்பயிர்செய்கையை மேற்கொள்ளும் மும்மூன்று நாடுகளை குறித்துப் பெயறிடுக. (6 புள்ளிகள் )
   2- இப்பிரதேசங்களில் நெற்பயிர்ச் செய்கைக்கு ஏதுவான காரணிகள் 4 தருக. (4 புள்ளிகள் )
   3- நெற்பபயிர்ச்செய்கையின் விஷேட பண்புகள் 2 தருக. (2 புள்ளிகள் )

6. பின்வரும் இடங்களை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக
   1- ஆசியாவில் காணப்படும் மேட்டு நிலங்கள் மூன்றைக் குறித்துப் பெயரிடுக. (தக்கனம், திபத், ஈரான் மேட்டுநிலம் ) (3 புள்ளிகள் )

   2-ஆபிரிக்காவின் மலைகள் 3 குறித்துப் பெயரிடுக (3 புள்ளிகள் )
   (அற்லஸ் மலை, டிரகன்ஸ்பேக், கீரிமாஞ்ஞாரோ மலைகள்)

   3-உலகின் கடல்கள் 3 குறித்துப் பெயரிடுக.
   (பால்டிக் கடல், மஞ்சட் கடல், கரீபியன் கடல்) (3 புள்ளிகள் )

   4-(நைல் நதி, மீசூரி மிசிசிப்பி, அமேசன் நதி ) போன்ற நதிகளை குறித்துப் பெயரிடுக
   ( குறிப்பு உரிய வர்ணங்களை பயன்படுத்துக.)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457